(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 18.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, யூலை 05, திங்கட்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0022/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மரபுரிமைகள், கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

அ) தற்போது இருக்கும் சட்ட நிலவரங்களுடன்,

(i) வயது வந்தோருக்கு மட்டுமான படங்களின் தற்போதைய நிலையினையும்,

(ii) பொது அரங்காட்டச் சபை உறுப்பினர்களையும்,

(iii) தணிக்கை செய்யப்படும் திரைப்படங்கள் அல்லது தொலைக்காட்சி நாடகங்களின் எண்ணிக்கையினையும், மேலும்

(iv) பொது அரங்காட்டச் சபையினால் வெளிநாட்டுத் திரைப்படங்களையும், DTH நேரடியாக வீட்டிற்கு ஒளிபரப்பும் முறையையும் தணிக்கை செய்ய முடியுமா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

0056/ '10

2.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை கல்வி வலயத்திற்குட்பட்ட அங்குனுகொலபெலஸ்ஸ கோட்டக்கல்வி காரியாலயத்தினால் மேற்பார்வை செய்யப்படும் தஹஅமுண மற்றும் ஹுன்னக்கும்புர ஆகிய ஆரம்ப பாடசாலைகள் 03 ஆண்டு காலமாக மூடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இரண்டு பாடசாலைகளைக் கொண்டு நடத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் தற்போதைய நிலை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளை நிர்மாணிப்பதற்கென செலவு செய்யப்பட்ட பணத்தின் தற்போதைய பெறுமதி எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைக் கட்டடங்கள் அழிவடைந்தால் அந்த இழப்பை ஏற்பது யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்கட்டடங்களை வேறொரு கருமத்திற்காகப் பயன்படுத்த அவர் நடவடிக்கை எடுப்பாரா,

(ii) மேற்படி கட்டடங்களைப் புனரமைத்து பயன்பாட்டிற்கு எடுக்காவிடின், வேறு நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக கட்டிடங்களையும் நிலத்தையும் விடுவிக்க உடன்படுகிறீர்களா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0107/ ‘10

3.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) ஐ.நா வின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரின் பணிப்புரையின்பேரில், கண்ட்ரி ஒப் ஒரிஜின் ரிசேர்ச் அண்ட் இன்போமேசன் எனும் நிறுவனத்தினால், 2010 ஏப்ரல் மாதத்தில் இலங்கை பற்றிய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கைச் சிறைச்சாலைகள் பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் சரியானவையா என்பதையும்,

(ii) இலங்கைச் சிறைச்சாலைகளின் நிலைமைகளை முன்னேற்றுவதற்காக சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான எந்தவொரு அமைச்சினாலும் கடந்த இருபது வருடங்களாகத் தயாரிக்கப்பட்ட விதப்புரைகளையும்,

(iii) அத்தகைய விதப்புரைகள் அமுல்படுத்தப்பட்டனவா என்பதையும்,

(iv) இல்லையெனின், அத்தகைய எந்த விதப்புரைகளும் விரைவாக அமுல்படுத்தப் படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பதோடு, அதுபற்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0264/ ‘10

4.

கௌரவ ரஊப் ஹகீம்,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடுகன்னாவ, குருகுன்தல, 18 ஆம் இலக்க இல்லத்தில் வதியும் பட்டதாரி ஆசிரியரான திரு. எஸ்.எம்.எம். ஹலீம் 2010.02.01 ஆம் திகதி தனது வேலைத்தளமான மாவனெல்ல சாஹிரா தேசிய பாடசாலையில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் வெளி நபர் ஒருவர் பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்து திரு. ஹலீமைத் தாக்கி இவரின் பிரத்தியேக வாகனமொன்றுக்கும் சேதம் விளைவித்துள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) திரு. ஹலீம், இது சம்பந்தமாக மாவனெல்ல பொலிஸ் நிலையத்தில் 273/06 ஆம் இலக்க, 2010.02.07 ஆம் திகதிய முறைப்பாடொன்றைச் செய்துள்ள போதிலும் அதுபற்றி இன்றுவரை முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) அரச பாடசாலை வளவொன்றினுள், கடமைக்கு இடையூறு ஏற்படுத்தி ஓர் ஆசிரியரைத் தாக்கியமை தொடர்பாக செய்யப்பட்ட மேற்படி முறைப்பாடு குறித்து, பக்கச்சார்பற்ற விசாரணையொன்றை நடத்துவதற்கான உத்தரவொன்றை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0058/ '10

5.

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இற்றைக்கு 06 மாதங்களுக்கு முன்னர் தார் இடப்பட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஓக்கேவெல பிரதேச செயலாளர் பிரிவின் மொரகந்தகொட கிராம உத்தியொகத்தர் பிரிவில் உள்ள மொரகந்தகொட பன்சல வீதி 100 மீற்றர் தொலைவுக்கு தார் கழன்று போக்குவரத்து செய்ய முடியாத நிலைமைக்கு உள்ளாகியுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளனவா என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0097/ '10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1995, இலிருந்து இற்றைவரையில், இலங்கை மின்சார சபை ஈட்டிய தேறிய இலாபத்தினை அல்லது நட்டத்தினை வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் விதிகளுக்கு அமைய பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறில்லையெனின், பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு செய்யப்பட்டவாறான இலாபம் மற்றும் நட்டத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2007, 2008, 2009 ஆண்டுகளில் டிசெம்பர் 31 வரையிலும் மற்றும் இன்றுள்ளவாறாகவும் இலங்கை மின்சார சபையின் குறுகியகால, நீண்டகால மற்றும் மொத்தக் கடனை வெவ்வேறாக அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) கடந்த நான்கு வருடங்களில் கடன் வழங்கும் முகவர்களினால் மீள அறவிடப்பட்ட கடனையும்,

(ii) தொகையினையும், வட்டி வீதத்தினையும்,

(iii) இலங்கை மின்சார சபையின் கடனை தவணை முறையில் மீளச் செலுத்தல் திட்டத்தினை வட்டியுடனும் முதலுடனும் வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறியத்ருவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0266/ '10

7.

கௌரவ ரஊப் ஹகீம்,— தேசிய மரபுரிமைகள், கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் (188 ஆவது அதிகாரம்) கீழ் பாதுகாக்கப்பட வேண்டிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த புனித தலங்களாக (நினைவுத் தூபிகள்), மேற்படி அமைச்சினால் இதுவரையில் இலங்கையில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள முஸ்லிம் சமயம் சார்ந்த புனித தலங்கள் மற்றும் முஸ்லிம் கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தலங்களின் பெயர்கள், விலாசங்கள், அவை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி மற்றும் குறித்த வர்த்தமானி இலக்கத்தினை மாவட்டரீதியில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

0270/ '10

8.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— தேசிய மரபுரிமைகள், கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டிய நடனம் மற்றும் பேரிகை வாசித்தலுக்கு அரச மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்படும் பயிற்சி வாய்ப்புக்களையும்,

(ii) இந்நடன வகைகளில் சிறந்தவற்றை தொலைக்காட்சி மற்றும் திரைப் படங்களுக்காக ஒலி/ஒளிப்பதிப்பு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும்,

(iii) இத்துறையில் பயிற்சிக்கான வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும், மரபு ரீதியான நடனவகைகளைக் கற்பதையும் பேணிப்பாதுகாத்தலையும் உறுதிப்படுத்துவதற்கும் அவர் நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்,

(iv) இவற்றையும் பரத நாட்டியம் உட்பட ஏனைய மரபு ரீதியான நடனவகைகளையும் வெளிக்கொணரும் நடனத்திற்கான தேசிய அரங்காற்றுகைப் பயிற்சி நிலையமொன்று நிறுவப்படுவதை அவர் ஊக்குவிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 2 ஆம், 3ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

2.

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"இலங்கை ஔடதங்கள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2010) — (ஒதுக்கப்பட்ட ஐந்தாம் நாள்) — குழு ஆய்நிலை.

*2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மாண்புமிகு சனாதிபதியவர்களால், மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2010 யூன் மாதம் 29 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப் படுமாக.

*3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைச் சட்டத்தின் 11 ஆம், 17 ஆம் மற்றும் 20 (2) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 43 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009, யூலை மாதம் 31 ஆந் திகதிய 1612/32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.07.03 அம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.06 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 06

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 28502 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "விவசாயப்பண்ணை முற்பணக் கணக்கு — விவசாயத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 321,000,000 இலிருந்து ரூபா 260,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 321,000,000 இலிருந்து ரூபா 210,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.01.01

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.07 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 07

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பண்டசாலை முற்பணக் கணக்கு — இலங்கை புகையிரதத் திணைக்களங்கள்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 1,200,000,000 இலிருந்து ரூபா 1,800,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 1,200,000,000 இலிருந்து ரூபா 700,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 500,000,000 இலிருந்து ரூபா 850,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.01.01

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.20 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமெனப் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 20

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பிற அரசாங்கத்தின் சார்பில் கொடுப்பணவுக்கான முற்பணக்கணக்கு — அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 5,300,000 இலிருந்து ரூபா 4,300,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.04.22

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.21 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமெனப் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 21

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பல்லின முற்பணக்கணக்கு — அரச கணக்குகள் திணைக்களங்கள்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 200,000,000 இலிருந்து ரூபா 20,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 560,000,000 இலிருந்து ரூபா 44, 700,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 588,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.04.22

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.23 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமெனப் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 23

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 01602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "வழங்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் பணம் முற்பணமாக வழங்குதல் முற்பணக் கணக்கு — இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா 6,000,000 இலிருந்து ரூபா 10,700,000 வரை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.04.22

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள் இத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனப் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

## அட்டவணை

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

நிதி ஆண்டு 2009 தொடர்பில் 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லைகள் | | IV அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பற்று மீதிகளின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் | 12501 | - | - | - | - | 20,000,000 | 30,000,000 | 1 |
| 2. | கடற்றொழில் நீர் வளங்கள் திணைக்களம் | 29001 | - | - | - | - | 90,000,000 | 97,000,000 | 2 |
| 3. | நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு | 11001 | - | - | - | - | 50,000,000 | 55,000,000 | 3 |
| 4. | ஏற்றுமதி அபிவிருத்தி சர்வதேச வர்த்தக அமைச்சர் | 16701 | - | - | - | - | 9,000,000 | 13,000,000 | 4 |
| 5. | தொழில் நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம் | 21501 | - | - | - | - | 130,000,000 | 247,000,000 | 5 |
| 6. | மீள் குடியமர்த்துகை, அநர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் | 14501 | - | - | - | - | 15,000,000 | 21,000,000 | 8 |
| 7. | வர்த்தகம், வாணிபம் நுகர்வோர் அலுவல்கள் மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சர் | 11601 | - | - | - | - | 21,000,000 | 25,000,000 | 9 |
| 8. | அரசாங்க அச்சாளர் திணைக்களம் | 21101 | - | - | - | - | 175,000,000 | 245,000,000 | 10 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9. | மாவட்டச் செயலகம், மொனராகல | 27701 | - | - | 23,500,000 | 18,000,000 | - | - | 11 |
| 10. | மாவட்டச் செயலகம், கண்டி | 25801 | - | - | - | - | 155,000,000 | 172,000,000 | 12 |
| 11. | மாவட்டச் செயலகம், மாத்தறை | 26201 | - | - | - | - | 165,000,000 | 169,000,000 | 13 |
| 12. | மாவட்டச் செயலகம், புத்தளம் | 27301 | - | - | - | - | 120,000,000 | 142,000,000 | 14 |
| 13. | மாவட்டச் செயலகம், அம்பாறை | 27001 | - | - | 29,500,000 | 27,000,000 | 72,000,000 | 170,000,000 | 15 |
| 14. | மாவட்டச் செயலகம், கச்சேரி, கிளிநொச்சி | 26801 | - | - | - | - | 26,000,000 | 29,000,000 | 16 |
| 15. | மாவட்டச் செயலகம், இரத்தினபுரி | 27801 | - | - | 35,400,000 | 26,000,000 | 115,000,000 | 132,000,000 | 17 |
| 16. | மாவட்டச் செயலகம், பொலன்னறுவ | 27501 | - | - | - | - | 73,000,000 | 74,000,000 | 18 |
| 17. | பெற்றோலியம், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் | 11501 | - | - | - | - | 6,500,000 | 8,200,000 | 19 |
| 18. | இலங்கை கடற்படை | 22301 | - | - | - | - | 600,000,000 | 677,000,000 | 22 |
| 19. | மலையக சிறு பயிர்ச் செய்கை புனரமைப்புத் திணைக்களம் | 30501 | - | - | - | - | 5,000,000 | 6,000,000 | 24 |
| 20. | சட்ட அலுவல்கள் திணைக்களம் | 32301 | - | - | - | - | 1,185,000 | 1,300,000 | 25 |
| 21. | முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் | 32401 | - | - | - | - | 1,900,000 | 8,500,000 | 26 |



2009 ஏப்ரல் 06 ஆம் திகதி
கொழும்பு - 01.

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம்,— நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்சுமன்) சம்பளம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 156 (3) உறுப்புரையின் வண்ணம் 2009.01.01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு நடைமுறைக்கு வருமாறு அமைய வேண்டுமென இப் பாராளுமன்றத்தினால் இத்தால் குறித்துரைக்கப்படுகின்றது.

நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமன்) - ரூ. 65,000 /=

மேலும், இந்த மாதாந்த சம்பளத்துள் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வீட்டு வாடகைப் படியும் உள்ளடக்கப்பட்டுள்ளதாதலால், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஓம்புட்சுமன்) வீட்டு வாடகைப் படியும் அடங்கலாக ரூ. 65,0000/= மாதாந்த சம்பளத்திற்குப் புறம்பாக, 2009.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிற படிககைப் பெறுவதற்கு உரிமை இல்லையெனவும் இந்தப் பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## தினைப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2010) என்னும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களளைத் “தினப்பணிக்கான அனுபந்தம்” என்னும் தனியிதழிற் காண்க.